**சார்பு நீதிமன்றம், திருத்துறைப்பூண்டி**

**SC No. 110 /2023**

2025 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 10 ஆம் நாள் திங்கள்கிழமை

அ.சா.2 இந்திய சாட்சி சட்டத்தின் கீழ் திருமதி. செல்வமணி Gr.II Bench Clerk அவர்களால் சாட்சியிடம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | மாலதி | த/பெ.: | மாதாராமன் |
| கிராமம்: | கண்ணன் மேடு | தாலுக்கா: | திருத்துறைப்பூண்டி |
| மதம்: | இந்து | தொழில்: | விவசாயம் |
| வயது: | 38 | முகவரி: | கண்ணன் மேடு |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of – 1873 on day of 10.02.2025

**<u>முதல் விசாரணை:_</u>**

ஆஜர் எதிரிகளை தெரியும். அசா1 எனது கணவர் ஆவார். 27.10.2022ல் மாலை 06.00 மணியளவில் வேனுகோபால், ரமேஷ், ஜனார்தன் மற்றும் தமிழ்மைந்தன் ஆகியோர்கள் எனது கணவர் கொற்கையிலிருந்து சாக்கை ரோடு வழியாக இருசக்கர வாகனத்தில் வந்தபோது நான் அங்குள்ள மதில் கட்டையில் உட்காரந்திருந்தேன். எனது கணவர் நீர்நிலை ஆக்கிரமிப்பு சம்மந்தமாக சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு போட்டு அதன் பேரில் 27.10.2022ல் வட்டாட்சியர் தலைமையில் ஆக்கிரமிப்புகளை அகற்றினார்கள். அப்பபோது எதிரிகள் எனது கணவரை பார்த்து கோர்டில் எங்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளதாகவும், எங்களை மதிக்கவில்லை என சொல்லி கம்பி, கட்டை போன்ற ஆயுதங்களால் எதிரிகள் அனைவரும் எனது கணவரை

அடித்தார்கள். என் கணவரை பார்த்து ஆபசமாக தேவுடியா மவனே, குச்சிகாரி மவனே என பேசியும், உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என மிரட்டினார்கள். அதனால் எனது கணவருக்கு இடது காது, இடது கால், தலையில் ஆகிய பகுதிகளில் இரத்த காயம் ஏற்பட்டது. எதிரிகள் எனது கணவரை அடித்தபோது துணிகளை அகற்றிவிட்டு ஆடை இல்லாமல் நிர்வாணமாக வைத்து அடித்தார்கள். பின்னர் எனது கணவரை எதிரிகள் கைகளை கட்டி குழியில் தள்ளி விட்டார்கள். பின்னர் பக்கத்தில் இருந்தவர்கள் 108 ஆம்புலன்ஸ் மூலமாக திருத்துறைப்பூண்டியில் உள்ள அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். சரவணன் என்பவர் எனது கணவருக்கு லுங்கி கொடுத்து மருத்துமவனைக்கு அனுப்பி வைத்தார். போலிசார் என்னை விசாரித்து வாக்குமூலம் வாங்கினார்கள். இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள். நான் நடந்தை சொன்னேன்.

**எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை இல்லை என தெரிவித்தார்.**

Typed down to my dictation, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.